No. of Printed Pages : 7

பதிவு எண் | M | A | R | 2 | 0 | 1 | 8 |

# பகுதி I – தமிழ் – இரண்டாம் தாள்

## (உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)

# Language – Part I – TAMIL – Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

**I.** பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளின் மிகாது** விடை எழுதுக. **3x4=12**

**1.** தமிழ்மொழியின் மீது பற்றுக் கொள்ளாத தமிழ் மக்களைப் பரிதிமாற்கலைஞர் கடிந்துரைப்பது யாங்ஙனம் ?

**2.** உலகில் சமரசம் பரவாமைக்குக் காரணங்களாகத் திரு.வி.க. கூறுவன யாவை ?

**3.** கவிதைக்குரிய நல்லியல்புகளைக் கம்பன் உரைக்குமாறு யாங்ஙனம் ?

**4.** பழந்தமிழ் மாந்தர் பெரிய முயற்சியையே மதித்து ஒழுகினர் என்பதனை விளக்குக.

**5.** நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழப்பது பற்றித் திரு.வி.க. உரைப்பன யாவை ?

[ திருப்புக

**II.** பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளின் மிகாது** விடை எழுதுக. **3x4=12**

6. மக்கள் நாகரிகத்தோடு மாட்டிற்கும் தொடர்புண்டு என்பதனைப் பாவாணர் கூறுமாறு யாங்ஙனம் ?

7. நீதி நூல்களின் பொதுவான இயல்பினைக் குறித்து எழுதுக.

8. ஒருபடி முன்னேற்றம் என்று மு.வ. உரைப்பது யாது ?

9. செப்புத் திருமேனிகளின் பொற்காலம் எது ? ஏன் ?

10. ஆவின் சிறப்புகளாகப் பாவாணர் விதந்துரைப்பன யாவை ?

**III.** பின்வரும் வினாக்களுள் **ஏதேனும் ஒன்றனுக்கு** மட்டும் **இருபது வரிகளின் மிகாது** விடை எழுதுக. **1x6=6**

11. 'தமிழ் உயர்தனிச் செம்மொழி' - இத்தலைப்பின் கீழ் பரிதிமாற்கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக.

12. கோயிற்கட்டடக் கலைபற்றி விளக்கி வரைக.

**IV.** பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் **இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்** விடை எழுதுக. **2x10=20**

13. 'மண்' அல்லது 'கிழிசல்' என்னும் சிறுகதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

**அல்லது**

'பழிக்குப் பழி' அல்லது 'ஓர் உல்லாசப் பயணம்' என்னும் சிறுகதையில் இடம் பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடக வடிவில் எழுதுக.

**14.** ‘சட்டை’ அல்லது ‘வேலி’ என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதை மாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

**அல்லது**

பிள்ளைகளால் கைவிடப்பட்டு முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள தந்தையொருவரின் மனநிலையை நும் சொந்த நடையில் ஒரு கட்டுரையாக எழுதுக.

**அல்லது**

‘மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து’ என்னும் கதையில் காணப்படுவது போல் நாட்டு வழக்கம், ஊர் மரபுகளை நீ அறிந்தவாறு ஒரு கட்டுரை வரைக.

**V.** **15.** பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து அதில் அமைந்துள்ள மையக்கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச் சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. **1x10=10**

ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் - சாதி
தெரிவதுண் டோஅப்பா ?
எவர் உடம்பினிலும் - சிவப்பே
இரத்த நிறமப்பா !
எவர் விழிநீர்க்கும் - உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா !

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா !
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா !
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார் !
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார் !

**- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.**

[ திருப்புக

**குறிப்பு :** காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் **VI** மற்றும் **VII** வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன.

**VI.** பின்வரும் தொடர்களில் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக. **3x2=6**

**16.** A penny saved is a penny gained.

**17.** United we stand, divided we fall.

**18.** Too much of anything is good for nothing.

**19.** Practice makes one perfect.

**20.** Experience is the best teacher.

**21.** 'Health is Wealth'.

**VII. 22.** பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில் வாழ்க்கை நிகழ்வில் அமைத்து **(பத்து வரிகளில்)** எழுதுக. **1x4=4**

(அ) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

(ஆ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

(இ) ஆத்திரக் காரனுக்குப் புத்தி மட்டு

**அல்லது**

'மழை' அல்லது 'வாய்மை' என்னும் தலைப்பில் சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றினை **எட்டு** அடிகளுக்குக் குறையாது **பத்து** அடிகளுக்கு மிகாது எழுதுக.

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா **VI** மற்றும் **VII**-ல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக காது கேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் **16** முதல் **22** வரை உள்ளவற்றில் **எவையேனும் ஐந்தனுக்கு** மட்டும் ஏற்ற விடையை எழுதுக. **5x2=10**

பாண்டிய நாட்டு மன்னன் சீவகனுக்கு மகள் மனோன்மணி. மனோன்மணியைத் தலைவியாகக் கொண்டமையால் நூலுக்கு மனோன்மணீயம் என்பது பெயராயிற்று. லிட்டன் பிரபு என்பார் ஆங்கில மொழியில் எழுதிய 'இரகசிய வழி' என்னும் நூலைத் தழுவி மனோன்மணீயம் நாடகம் இயற்றப்பட்டுள்ளது. ஆகவே இந்நாடக நூலை வழிநூல் என்று கூறலாம். ஆயினும் இந்நூலாசிரியர் தமது கற்பனைத் திறத்தால் முதல்நூல் எனக் கொள்ளும்படி படைத்தளித்துள்ளார்.

மனோன்மணீயம் ஐந்து அங்கங்களைக் கொண்டுள்ளது. களம் என்னும் காட்சிகள் இருபதைப் பெற்று உள்ளது. இடையே சிவகாமி சரிதம் என்னும் துணைக் கதை ஒன்றும் இடம் பெற்றுள்ளது. மனோன்மணீயம் நாடகத்தை இயற்றியவர் பேராசிரியர். பெ. சுந்தரம் பிள்ளை. இவர் கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஆலப்புழையில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் கி.பி. 1855 - 1897.

**வினாக்கள் :**

**16.** மனோன்மணி யார் ?

**17.** எந்த நூலைத் தழுவி மனோன்மணீயம் எழுதப்பட்டது ?

**18.** மனோன்மணீயம் எத்தனை அங்கங்களைக் கொண்டுள்ளது ?

**19.** களம் என்னும் காட்சிகள் எத்தனை உள்ளன ?

**20.** மனோன்மணீயம் நூலின் ஆசிரியர் யார் ?

**21.** மனோன்மணீயம் நூலில் வரும் துணைக்கதை எது ?

**22.** இந்நூல் ஆசிரியர் பிறந்த ஊர் எது ?

[ திருப்புக

**VIII.** பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக. **10x1=10**

**23.** ஒவ்வொரு சிற்றூர்களிலும் ஊராட்சி உள்ளது.

(தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக).

**24.** வேட்டுவ பெண்கள் விளையாட போவதுண்டு என்று சஞ்சீவிபர்வத சாரல் பாடுகிறது.

(தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக).

**25.** சோறுக் கொதிக்கிறது. போத்தம்பி தணலைக் குறை என்றவுடன் சென்றுப் பார்த்தான்.

(தேவையற்ற இடங்களில் உள்ள வல்லின மெய்களை நீக்கி எழுதுக).

**26.** 'டி.வி.யில் சீரியல் பார்க்காவிட்டால் லைஃபே போர் அடித்து விடும்'. - என்கிறார் தாத்தா.

(ஆங்கில சொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக).

**27.** ஒருத்தன் ஒண்டியாய்ப் போனால் அது ஊர்கோலமா ?

(தொடரில் உள்ள கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக).

**28.** நெள்வயலில் கலை பரித்த போது அரவு கடித்ததால் அளறினாள்.

(எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக).

**29.** கரும்புத் தோப்புக்கு அருகாமையில் நாய் கத்தியது.

(மரபு வழூஉச் சொற்களை நீக்கி திருத்தமாக எழுதுக).

30. பிரயாணி பிரயாணத்தை ரத்து செய்தவுடன் ரூபாய் பட்டுவாடா செய்யப்பட்டது.

(பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுக).

31. அரண் – அரன் அல்லது வால் – வாள் பொருள் வேறுபாட்டை உணர்ந்து அதனைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்தெழுதுக.

32. கவிதை இது அல்ல இது அல்ல என எளிதில் கூறிவிடலாம் ஆனால் இன்னது தான் கவிதை என்று வரையறுத்தல் எளிதல்ல என்று ஜான்ஸன் பதில் கூறினாராம்.

(பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டு எழுதுக).

-oOo-